வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 0015/ஆ4/2022, நாள். 20.01.2022.

பொருள் 2021–2022 –ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – +2 பள்ளி மாணவர்களுக்கான **தேர்வுக் கட்டணம்** மற்றும் **TML கட்டணம்** செலுத்துதல் – ஆன்லைன் வழியாக மேற்கொள்ள **கூடுதலாக கால அவகாசம்** வழங்குதல் – தொடர்பாக.

பார்வை சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 027018 / எச்.1 / 2021, நாள். 19.01.2022.

#######

பார்வையில் காணும் கடிதப்படி, 2021–2022 –ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களது தேர்வுக்கட்டணத் தொகை மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான TML கட்டணத் தொகையினை ஆன்லைன் வழியாக 05.01.2022 முதல் 20.01.2022 வரையிலான நாட்களுக்குள் செலுத்திடுமாறு அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுக் கட்டணம் **(Exam Fees),** மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான **(TML Fees)** கட்டணத்தினை சில பள்ளிகள் செலுத்தவில்லை என தெரியவந்துள்ளது. எனவே, மேற்காண் கட்டணத் தொகைகளை ஆன்–லைனில் செலுத்துவதற்கு ஏதுவாக 31.01.2022 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது என அனைத்து வகை மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுர்

அனைத்து வகை மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர்,
வேலூர்.
(தகவலுக்காகவும், தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)